2014 ஜூலை 31]

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இடம் இருக்கின்றபட்சத்தில், துணை மின் நிலையம் அமைத்துத் தரப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

இடம் மின் துறையினரால் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது; 10 ஏக்கர் இடம் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படி துணை மின் நிலையம் உருவாக்கித் தரப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 287, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

287—

மேம்பாலம்

***21660—திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, மருதாடு அருகிலுள்ள வழூரில் புதிய மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதி, வழூர், மருதாடு சாலையில், கி.மீ. 2/6-ல் சுகநதி ஆற்றின் குறுக்கே, உயர்மட்ட மேம்பாலம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம்

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவிப்பு செய்துள்ளார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.*

திரு. வே. குணசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாவது முறையாக தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்று, நாட்டு மக்களுக்கும், நாட்டிற்கும் அமைதி, வளம், வளர்ச்சி என பொற்கால ஆட்சி நடத்திவரும், கோடானுகோடித் தொண்டர்களின் உரிமைகளுக்கு பாதுகாவலரே! ஆதி திராவிட மக்களின் ஒளிவிளக்கே! (மேசையைத் தட்டும் ஒலி) உண்ண உணவு, உடுக்க உடை, உறங்க உறைவிடம் தந்திட்ட ஏழைகளின் தங்கம், கருணைத் தாயே! காவேரியை மீட்ட காவியத் தலைவியே! முல்லைப் பெரியாறின் உரிமையை நிலைநாட்டிய தமிழகத்தின் உரிமைக் குரலே! கச்சத் தீவை மீட்பேன் எனச் சபதம் எடுத்த சத்தியத் தாய் அம்மா அவர்களே! எத்திசையும் புகழ் மணக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

முற்பகல் 10-15

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, வந்தவாசி ஒன்றியம், மருதாடு அருகிலுள்ள வழூரில் புதிய மேம்பாலம் கட்டப்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் பணிவான நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி அவர்கள்.*

திரு. ஆர். சின்னசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தின் விடிவெள்ளி, இந்தியாவின் வழிகாட்டி' மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

எனது சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதி, நஞ்சுண்டாபுரத்திற்குச் செல்கிற வழியில் இரயில்வே கடவில்

2014 ஜூலை 31]

மேம்பாலம் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள் தாமதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே மக்களின் போக்குவரத்திற்கு மிகவும் அசௌகரியமாக இருக்கிறது. அந்தப் பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு, எப்போது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிற மேம்பாலப் பணிகளை விரைவில் முடிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு அரசு பொது மருத்துவமனை அருகில், நெடுஞ்சாலைத் துறையின் சார்பிலே ரவுண்டானா அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அந்த இடத்திலே மேம்பாலம் கட்டப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. மேம்பாலம் கட்டும் பணி எப்பொழுது தொடங்கப்படும் என அறிய விரும்புவதோடு மேலும் அந்த இடத்திலே தலைவர்களின் சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சிலைகள் அதே இடத்திலே அமைக்கப்படுமா அல்லது மாற்று இடத்திலே அமைக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு பொது மருத்துவமனை அருகே மேம்பாலம் கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்தும் பணிக்காக ரூ.23 கோடி அளவிற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு,

ஆரம்பகட்டப் பணியான நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்தவுடன் பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அங்கே தலைவர்களின் சிலைகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு இதனைக் கொண்டுசென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான ஆணையைப் பெற்று, அங்கே மேம்பாலம் அமைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்குகிறேன். எனது கவுண்டம்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்திற்குட்பட்ட நாயக்கன்பாளையம் ஊராட்சியிலே தரைமட்டப் பாலம் இருக்கின்றது. அதை உயர்மட்டப் பாலமாக அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தரைமட்டப் பாலத்தை உயர்மட்டப் பாலமாகக் கட்ட வேண்டுமென்று இங்கே வினா எழுப்பியுள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஒவ்வோர் ஆண்டும் நபார்டு திட்டத்தின்கீழ், குறிப்பிட்ட இடங்களில் பாலங்களைக் கட்டிக் கொடுத்துவருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விதி 110-ன்கீழ் ரூ.300 கோடி மதிப்பீட்டில், 100 எண்ணிக்கையிலான பாலங்கள் கட்டிக் கொடுக்கப்படும் என்று இப்பொழுது

2014 ஜூலை 31]

அறிவித்திருக்கின்றார்கள். அதனடிப்படையிலே, நடப்பாண்டில் அதை ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், மார்த்தாண்டம் மிக முக்கியமான நகரமாகும். கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் என்று அந்தப் பகுதி மிகவும் நெருக்கடியாக இருக்கிறது. சரியான சாலை வசதி இல்லாத, குறுகிய இடமாக இருக்கிற காரணத்தால், போக்குவரத்து நெருக்கடி அதிகமாக இருக்கிறது. அந்தப் பகுதியிலே ஒரு மேம்பாலம் அமைப்பது மிகவும் நல்லது. எனவே, போக்குவரத்து நெருக்கடியைக் குறைப்பதற்கு மேம்பாலம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அந்தச் சாலையை விரிவுபடுத்தி, அங்கே மேம்பாலம் கட்டப்பட வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையிலே மேம்பாலம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இருந்தால், கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா அவர்கள்.*

டாக்டர் ச. துரையப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி,*

பொன்னியின் செல்வி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மதுரையிலிருந்து குற்றாலம் செல்லும் நெடுஞ்சாலை, புளியங்குடி பகுதியில் மிகக் குறுகிய சாலையாக இருக்கிறது. அதன் காரணமாக விபத்துகள் அதிகமாக ஏற்படுகின்றன. எனவே, ஒன்று, அந்தச் சாலையை விரிவுபடுத்த வேண்டும். இல்லையென்றால், மேம்பாலம் கட்டித் தரவேண்டும். ஆகவே, ஏதேனும் ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குற்றாலம் செல்கின்ற சாலை குறுகலாக இருக்கின்றது; அதை விரிவுபடுத்த வேண்டுமென்று இங்கே கேட்டிருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து, அங்கே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பின், அந்தச் சாலையை விரிவுபடுத்துவதற்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 288, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

288—

சொந்தக் கட்டடம்

***6890—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டையிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?